**செய்தி வெளியீடு எண்: 898** **நாள்: 13.10.2010**

**<u>இந்து சமய அறநிலையத்துறை–சென்னை</u>**
**<u>கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்</u>**
**<u>13.10.2010ந் தேதிய கூட்டம்</u>**

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களின் பணியாற்றும் கிராமக் கோயில் பூசாரிகளின் நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் "**கிராமக்கோயில் பூசாரிகள் நல வாரியம்**" அமைத்து 22.1.2007–அன்று அரசு ஆணை வழங்கப்பட்டது.

இதையொட்டி 23.4.2007 நாளிட்ட அரசாணையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகக் கொண்டு 9 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 10 அலுவல்சாரா உறுப்பினர்களும் நியமித்து ஆணையிடப்பட்டது. ஏற்கனவே நியமிக்கப்பட்ட அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுற்ற நிலையில் புதியதாக 9 அலுவல்சாரா உறுப்பினர்கள் கடந்த ஆகஸ்ட் 2010–ல் நியமனம் செய்யப்பட்டனர்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 22.5.2007, 18.3.2008, 6.11.2008 மற்றும் 8.10.2009 ஆகிய தேதிகளில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட பூசாரிகள் நல வாரியக் கூட்டம் இன்று, 13.10.2010 மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.ரா.சிவகுமார், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு.ப.ரா.சம்பத், இ.ஆ.ப., மற்றும் திரு.எம்.பத்மநாபன், நிதித்துறை அரசு கூடுதல் செயலர், திரு.து.சச்சிதானந்தம், வருவாய்துறை அரசு கூடுதல் செயலர், வே.மணிவண்ணன், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அரசு சார்புச் செயலர் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய செயலாளர் திரு.அ.ஞானசேகரன் ஆகிய அலுவல்சார்ந்த உறுப்பினர்களும், திரு.ஏ.பி.சண்முகம், திரு.ப்பி.வாசு, திரு.எஸ்.சங்கர், திரு.கே.சுந்தரம் மற்றும் திரு.ஜி.பாலகிருஷ்ணன் ஆகிய அலுவல்சாரா உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இவ்வாரியத்தில் இதுவரை 45575 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின்மூலம், 434 பூசாரிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்கிடவும், 750 பூசாரிகளின் வாரிசுகளின் கல்வி கற்பதற்காக நிதி உதவி, 423 பூசாரிகளின் மகன்/மகள் திருமணத்திற்கு நிதி உதவி, 134 பூசாரிகளின் மனைவி அல்லது மகளின் மகப்பேற்க்கு நிதி உதவி, மரணமடைந்த 49 பூசாரிகளின் வாரிசுக்கு நிதி உதவி, மரணமடைந்த 8 பூசாரிகளின் ஈமச்சடங்கிற்கு நிதி உதவி உள்ளிட்ட 1798 பூசாரிகளுக்கு ரூ.53.24 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்றைய கூட்டத்தில், பூசாரிகள் நல வாரியத்திற்கான விதிமுறைகள் ஏற்படுத்துதல், புதியதாக உறுப்பினர்களாக சேர்ந்துள்ளவர்களை பதிவுசெய்தல், ஏற்கனவே சேர்ந்துள்ள உறுப்பினர்களின் அடையாள அட்டைகளை புதுப்பித்தல், பூசாரிகளுக்கு நல உதவிகள் வழங்குதல்உறுப்பினர் இறந்தால் ஈமச் சடங்கிற்கு நிதி வழங்தல், வாரிசுக்கு நிதி வழங்குதல் மற்றும் மூக்குக் கண்ணாடிக்கு நிதி வழங்குதல் ஆகிய நல திட்டங்களுக்கான வருமான உச்ச வரம்பினை நீக்குதல் போன்ற பொருள்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**